மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல கோரிக்கைகள் வந்திருக்கலாம். இதிலே மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டு மானால் அவர் உட்கார்ந்திருக்கிற இடம்தான் கவுல் பஜார். இந்த இடம் சென்னை-திண்டுக்கல் ரோடு. ரன்-வே இதிலே வருகிறது. நான் இப்போது என்ன சொல்கிறேன் என்றால் அந்த ஊருக்கு சாலையை அந்த புறத்திலே கொண்டு வந்து இணைக் கிறோம் ஏனென்று கேட்டால் இங்கே ரன்-வே ஓடுகிறது இவர் சொல்கிறார், இந்த சாலை ஏற்கெனவே இந்தப் பகுதியில் இருந்தது. இந்த சாலை துண்டிக்கப்பட்டது. துண்டித்தவுடன் இந்தச் சாலையைப் போடுங்கள் என்கிறார். இல்லை. அதுவரையிலே ரன்-வே வருகிறது. ஆகவே, கிரா மத்திலே ரன்-வே ஓடுகிற காரணத்தினால் முடியாது. இரண் டாவது, மேலே ரன்-வே வைத்து கீழே சுரங்கப் பாதையை அமைப்பது எந்தவிதமான திட்டம் என்று எனக்கே புரிய வில்லை. இது மத்திய அரசுக்குத் தொடர்புடையது. சர்வதேச விமான நிலையத்தார் இரண்டு கிலோ மீட்டருக்கு அந்த இடத்தில் தார்ச் சாலையாகப் போட்டுக் கொடுத்தி ருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த தடவை, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கரும்பலகை, சுதைக்கட்டியோடு விளக்கினால் இன்னும் நன்றாக இருக்கும்.

10-40 மணி

5. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 39-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1990-91-விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,53,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''